Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY DECEMBER 27, 2024

வெள்ளிக்கிழமை, 27 டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 124 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## அரிசி இறக்குமதி: விசேட வர்த்தமானி வெளியீடு

அரிசியை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஜனவரி 10ஆம் திகதி வரை நீடிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை வர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2







சுனாமி பேரலை காவுகொண்டவர்களுக்காக

# கதறியழுது அஞ்சலி செலுத்திய உறவுகள்





இன்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் நாட்டின் கரையோர பிரதேசங்களில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த தங்களுடைய உறவினர்களை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியில் பல்வேறான நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு,கிழக்கு உள்ளிட்ட கரையோர பிரதேசங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றிருந்த பலரும், கதறியழுது தங்களுடைய உறவினர்களை நினைகூ கூர்ந்தனர். மலையகம் உள்ளிட்ட இதர பிரதேசங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். நாட்டின் பல பாகங்களிலும் மௌன அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

சுனாமி தின ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள், சுனாமி நினைவு தின துஆ பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

மேலதிக படங்கள் பக்கம் 6 (தமிழ் மிரர் நிருபர்கள் )





கடலில் மாயமான

## மூவரும் சடலங்களாக மீட்பு

■ கனகராசா சரவணன், பாறுக் ஷிஹான்

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் மூழ்கி காணாமல் போன தந்தை, மகன் மற்றும் மருமகன் ஆகியோரின் சடலங்கள் விநாயகபுரம் மங்கமாரி கடற்கரையில் வியாழக்கிழமை (26) மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## குழந்தை பலி; குடும்பமே காயம்

### கிளிநொச்சியில் நத்தார் சோகம்

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில், புதன்கிழமை (25) இரவு மோட்டார் சைக்கிளுடன் டிப்பர் வாகனம் மோதியதால் ஏற்பட்ட கோர விபத்தில் 2 வயது குழந்தை பலியானது. அத்துடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து, தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

A9 வீதியால் பயணித்த டிப்பர் வாகனம் குறித்த மோட்டார் சைக்கிளை மோதி விபத்தை







ஏற்படுத்தியதுடன், விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரம் வீதியை விலகி அந்த டிப்பர் வாகனம் பயணித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளையும் டிப்பர் வாகனம் சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சென்றுள்ளது. அத்துடன், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் விளம்பரப் பலகை மற்றும் தொலைத்தொடர்பு கம்பம் உள்ளிட்டவற்றையும் சேதப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## எரிந்த வண்டியில் இருந்து சடலம் மீட்பு

எரிந்த கெப் வண்டியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ள சம்பவம் மின்னேரிய பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

ஹபரணை-பொலன்னறுவை பிரதான வீதிக்கும் பதுஓயாவிற்கும் இடையில் 38 ஆவது கிலோ மீற்றர் மைல்கல்லுக்கு அருகில் எரிந்த கெப் வண்டியொன்றில் இருந்து நபரொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சுனாமி பேபி அஞ்சலி செலுத்தினர்

■ வ.சக்தி, கனகராசா சரவணன்

சுனாமி பேபி அபிலாஷ், அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூவிக்கு முன்பாக அஞ்சலியும் செலுத்தினார்.

சுனாமி பேபி அபிலாஷ் அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூவிக்கு முன்பாக ஆழிப்பேரலையால் உயிர் நீத்த உறவுகளுக்காகத் தனது அஞ்சலியை வியாழக்கிழமை(26) செலுத்தினார்.

சுனாமி பேபி என்றழைக்கப்படும் இந்த ஜெய ராசா அபிலாஷ் யார்?


கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையின்போது 2004.12.26 அன்று கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை அல்லோல கல்லோலபட்டது.

தொடர்ச்சி P2

## "ஒளியைப் பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் கட்டாயம்"

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்தும் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக பொலிஸ் தலைமையகம் விளக்கமளித்துள்ளது.

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேரங்களில் வாகனங்களை



நிறுத்துவதற்காகச் சமிக்ஞை காட்டும் போது பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான மின்விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

தொடர்ச்சி P2



மல்லியப்பு கோர விபத்து:

## தனியார் பஸ் சாரதிக்கு விளக்கமறியல் நீடிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- மல்லியப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் சாரதியை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (26) மீண்டும் முன்னிலைப்படுத்திய போது, சந்தேகத்திற்குரிய சாரதியை 2025 ஜனவரி 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் எம்.பாரூக்தீன் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## "தரப்படுத்தல்களும் உயர்த்தப்பட்டுள்ளன"

காலோசிதமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் புதிய வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக புதிய அரசாங்கம் நாட்டை பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்த்துவதற்கான வலுவான அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள தொழில் அமைச்சர் பொருளாதார அபிவிருத்தி



பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி ஸ்திரத்தன்மைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சுயாதீனமான மூன்றாம் தரப்பினரால் பாராட்டப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப தரப்படுத்தல்களும் உயர்த்தப்பட்டுள்ளன என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில், வியாழக்கிழமை (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார், இதில், பிரதி நிதி அமைச்சர் - கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் பங்கேற்றிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்





# மூவரும் சடலங்களாக மீட்பு

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை, மகன் மற்றும் அவரது மருமகனான சிறுவன் உட்பட 3 பேர் கடல் புதன்கிழமை (25) மாலை 5.30 மணிக்கு அலை இழுத்துச் சென்றதில் காணாமல் போயிருந்தனர்.

சங்கமன் கண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வாகனம் நந்தராஜ், அவருடைய 15 வயதுடைய மகன் டினுஜன் மற்றும் நந்தராஜ் சகோதரியின் மகனான 17 வயதுடைய கிரிஷோர் ஆகிய மூவரும் இவ்வாறு கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

குறித்து பிரதேசத்தைச் சேர்ந்த மயில்வாகனம் நந்தராஜ் அவரது மகன்? சகோதரியின் மகன் ஆகிய மூவரும் நத்தார் பண்டிகையையிட்டு புதன்கிழமை (25) மாலையில் கடலில் நீராடச் சென்றிருந்தனர். முதலில் கடலில் இறங்கிய அவரது மகனும், மருமகனும், கடலில் நீராடிக் கொண்டிருந்த போது, கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களைக் காப்பாற்றத் தந்தையும் கடலில் குதித்துள்ளார்.


தந்தையையும் கடல் அலை இழுத்துச் சென்று காணாமல் போயுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குழந்தை பலி; குடும்பமே காயம்







குறித்த டிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி மதுபோதையில் இருந்ததாக சம்பவ இடத்தில் நின்ற மக்கள் குறிப்பிடுகின்றனர். அந்த சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 வயது குழந்தை பலியானதுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 6 வயதுடைய பிள்ளை படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சுனாமி பேபி அஞ்சலி செலுத்தினர்

இரண்டு மாதம் ஒருவாரமும் நிறைந்த குழந்தையாக சுனாமி பேபி 81 எனும் பெயருடன் உலகம் முழுவதும் பேசும் குழந்தையாக மாறினான் இந்த ஜெயராசா அபிலாஷ்.

இந்த குழந்தை தங்களுடையது எனது ஒன்பது தாய்மார்கள் போராடினர். பின்னர் அங்கு ஏற்பட்ட குழப்ப நிலையால் வைத்தியசாலை நிர்வாகம் கல்முனை நீதவான் நீதிமன்றத்தை நாடியது. ஒன்பது தாய்மார்களையும் மரபணு பரிசோதனை செய்ய நீதவான் உத்தரவிட்டார்.

பின்னர் 52 நாட்களின் பின்னர் ஜெயராசா யுனித்தலா தம்பதியினர்களின் புதல்வனே அபிலாஷ் என நிரூபணமாகியது. பின்னர் அந்த குழந்தை ஜெயராசா யுனித்தலா தம்பதியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தற்போது மட்டக்களப்பு குருக்கள்மடம் கிராமத்தில் வசித்து வரும் அபிலாஷ் அவரது இல்லத்தில் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவுத் தூபி ஒன்றையும் அமைத்து வழிபாடு செய்து வருகின்றார்.

தற்போது 20 வயதுடைய சுனாமி பேபி என அறியப்படும் அபிலாஷ் அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூவிக்கு முன்பாக ஆழிப்பேரலையால் உயிர் நீத்த உறவுகளுக்காகத் தனது அஞ்சலியைப் பெற்றோருடன் செலுத்தினார்.

# "தரப்படுத்தல்களும் உயர்த்தப்பட்டுள்ளன"

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ,

இந்த வெற்றிக்கு சரியான முறையில் வழங்கப்பட்ட முன்னுரிமை மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் ஆகியன முக்கிய காரணங்களாகியுள்ளன. இவ்வாறாக, இலங்கை மக்களுக்கு "வளமான நடு - அழகான வாழ்வு" இனை ஏற்படுத்திக் கொடுப்பதை நனவாக்க அரசாங்கம் தனது மறுசீரமைப்புச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதன்படி, பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான தீர்மானமிக்க முயற்சியாக 2024 டிசெம்பர் 20ஆம் திகதி நடைமுறையில் உள்ள பிணைமுறி பரிமாற்றத்திற்காக புதிய பிணைமுறிகளை வெளியிடுவதை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், அதைத் திறம்படச் செயல் படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**பராட்டே சட்ட சலுகைகளை நீடித்தல்**

பராட்டே சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திகதியை ஒத்திவைப்பதற்குப் பதிலாக, நீண்டகாலமாகக் காணப்படும் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் காணப்படுவதை உறுதி செய்ய, அரசாங்கம் பங்குதாரர் குழுக்களுடன் இணைந்து கொண்டுள்ளது. இதன் பலனாக, பராட்டே சட்டத்தின் அமுலாக்கம் இப்போது 2025 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**நிவாரணப் பொதி**

கால நீடிப்பினால் மாத்திரம் வியாபாரங்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை. மத்திய வங்கியின் தரவுகளின்படி, 25 மில்லியனுக்கும் குறைவான கடன் மூலதனத்தைக் கொண்ட கடனாளர்களில் 99 சதவீதமானோர் வங்கிகளுடன் கலந்தாலோசித்து தங்களது கடன்களை செலுத்தும் முறைக்கு இணங்க 12 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 25 - 50 மில்லியன்கள் வரையிலான கடன்கள் கொடுக்கல் வாங்கல் செய்தோருக்கும் 9 மாதங்கள் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டாளர்களுக்கு 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட மற்றும் மத்திய வங்கியினால் செயல்படுத்தப்படும் இந்த நிவாரணப் பொதியில், குறிப்பாகக் குறைந்த வட்டி விகிதங்கள், மீள் செலுத்தும் காலம் நீடிப்பு, கடன் தரப்படுத்தலில் தளர்வு மற்றும் மதிப்பீட்டுச் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு வெளிப்படையான பொறிமுறையை ஏற்படுத்துவதன் மூலம் கடன் பெறுபவர்களுக்குப் பெருமளவில் நிவாரணம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரண நடவடிக்கைகள், பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை உறுதி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படுகிறது.

**அஸ்வெசும குடும்ப பிள்ளைகள்**

சமூகத்தில் ஆபத்திற்குட் படக்கூடிய தொகுதியில் இருக்கும் பெற்றோர்களுடைய பிள்ளைகளின் கல்வி மீதான சுமையைக் குறைக்கும் வகையில் எதிர்வரும் பாடசாலை தவணைக்காக அத்தியாவசியமான பாடசாலை புத்தகங்கள் மற்றும் எழுதுவினை பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு பிள்ளைக்கு 6,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக இந்த சலுகை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

**அஸ்வெசு பெறாத குடும்பங்களின் பிள்ளைகள்**

தற்போது அஸ்வெசும கிடைக்காத, ஆனால், நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் குடும்பங்களின் பிள்ளைகளுக்குக் கல்வி அமைச்சின் பரிந்துரைக்கமைய இந்த சலுகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டினை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதோடு, பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற மற்றும் இந்த உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள தகுதியான சகல பிள்ளைகளுக்கும் இந்த சலுகையை வழங்கும் வேலைத்திட்டம் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்..



# அரிசி இறக்குமதி: விசேட வர்த்தமானி வெளியீடு

அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, அரிசியை இறக்குமதி செய்யத் தனியாருக்கு அரசாங்கம் வழங்கியிருந்த கால அவகாசம் கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவடைந்ததையடுத்து, அந்த அனுமதியை மீண்டும் ஜனவரி 10ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இறக்குமதியாளர்கள் இந்தியாவில் இருந்து 67,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளதாகச் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரிசியை இறக்குமதி செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதும் இதுவரை அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை என சுங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எரிந்த வண்டியில் இருந்து...




ஹபரணை - மின்னேரிய வீதியில் பயணித்த நபர் ஒருவர், வாகனம் ஒன்று தீப்பிடித்து எரிவதாக மின்னேரிய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து மின்னேரிய பொலிஸார் குறித்த கெப் வண்டி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டுள்ளனர்.

புதன்கிழமை (25) இரவு 10 மணியளவில் தீ பரவியதாகவும், தீ பரவும் போது கெப் ஹபரணையை நோக்கி நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அதில் வேறு யாரும் இருக்கவில்லை எனவும் மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர். ஒருவரைக் கொன்று அவரது சடலத்தை கெப் வண்டியில் வைத்து தீ வைத்து எரிப்பதற்காகவே கெப் வாகனத்தை இந்த பகுதிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மின்னேரியா பொலிஸாரும் பொலன்னறுவை மாநகரசபையின் தீயணைப்புத் திணைக்கள அதிகாரிகளும் வந்து பெரும் முயற்சியில் தீயை முழுமையாக அணைத்துள்ளனர்.

தீப்பிடித்த கெப் வண்டி, கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான கெப் வண்டி என பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.



# "ஒளியைப் பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் கட்டாயம்"

அதனால், மின்விளக்குகளின் வெளிச்சம் வாகன ஓட்டுநர்களின் முகத்தில் படுவதால், சில சந்தர்ப்பங்களில் வாகனத்தைச் சாரதி கையாள்வதிலும் கட்டுப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுவதுடன், விபத்துகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. மேலும், உத்தியோகத்தர்கள் ஒளி பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் அணியாதிருப்பதால் அவர்களும் விபத்துகளில் சிக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அதனால், போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, இதற்கு முன்னர் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய இரவு நேரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காகச் சமிக்ஞை காட்டும் போது, உத்தியோகத்தர்கள் வாகன சாரதிகளுக்குத் தெளிவாகத் தெரியும் வகையில் ஒளியைப் பிரதிபலிக்கும் ஜாக்கெட்டுகள் அணிந்திருத்தல் வேண்டும். மேலும் வாகனங்களை நிறுத்துவதற்காக தற்போது பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்டுள்ள சிவப்பு மின் சமிக்ஞை விளக்குகளை முடிந்தவரைப் பயன்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மேலும், இரவு கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் இந் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்களா, என்பதைத் தொடர்ந்தும் கண்காணிக்குமாறு தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள், பொறுப்பதிகாரிகள் மற்றும் போக்குவரத்து பொறுப்பதிகாரிகளுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்



# தனியார் பஸ் சாரதிக்கு விளக்கமறியல் நீடிப்பு

விபத்து தொடர்பில் நுவரெலியா மாவட்ட பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகரும் ஹட்டன் பொலிஸாரும் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (26) விளக்கங்களை முன்வைத்து சந்தேக நபரின் விளக்கமறியலை நீடிக்குமாறு நீதவானிடம் கோரினர்.

ஹட்டன் பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்த விளக்கங்களை கருத்திற்கொண்ட நீதவான், சந்தேக நபரின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார்.

நாவலப்பிட்டி, நவ திஸ்பனையில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய பிரஷசன்ன பண்டாரவின் விளக்கமறியலே நீடிக்கப்பட்டுள்ளது.

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி கடந்த 21ஆம் திகதி பயணித்த தனியார் பேருந்து, ஹட்டன் -கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு பகுதியில் வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் பாய்ந்து தேயிலைத் தோட்டத்திற்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மூவர் மரணமடைந்தனர். 51 பேர் காயமடைந்து, டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எட்டுப் பேர், கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

# மதனமோதகத்துடன் ஒருவர் கைது



செதிவாகரன்

நுவரெலியா - ஹாவாஎலிய பகுதியில் சட்டவிரோத போதைப்பொருட்களுடன் ஒருவர் வியாழக்கிழமை(26) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் 34 வயதுடைய ஒருவர் மதன மோதகத்துடன் கைது செய்துள்ளனர்,

கைது செய்யப்பட்ட குறித்த நபரிடமிருந்து கஞ்சா கலவை செய்யப்பட்ட 300 மதனமோதகம் போதை குளிசைகள் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எவ்வித அனுமதிப்பத்திரமும் இன்றி சட்டவிரோதமாக நடத்தி வந்த ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த மதன மோதக போதை குளிசைகளை விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையை போன்று நீல இரத்தினக்கல்

இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் இலங்கையின் வடிவிலான அரிய இயற்கை நீலக்கல் ஒன்றை கொள்வனவு செய்ததாக வியாழக்கிழமை (26) தெரிவித்துள்ளார்.

இதனை வாங்கிய நிவித்திகல யக்தெஹிவத்தையைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரி.ரொஹான் வசந்த திஸாநாயக்க, இந்த நீல மாணிக்கத்தை மாணிக்கக் கற்கள் சேகரிப்பவர் ஒருவரிடமிருந்து வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நீல மாணிக்கத்தை நீங்கள் ஒரே நேரத்தில் பார்த்தால், இலங்கை மற்றும் யாழ்ப்பாண குடாநாட்டின்




நிலப்பரப்பு எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் காணலாம்.

மன்னாரின் நிலையும் அவ்வாறே தோன்றுகிறது. அதே போல் திருகோணமலை, இலங்கையின் நான்கு திசைகளும் அப்படித்தான் தோன்றும்.

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையிடம் இந்த இரத்தினக்கல் சமர்ப்பிக்கப்பட்டு, 2024-12-24 அன்று இரத்தினக்கல் அடையாள சோதனை அறிக்கை பெறப்பட்டது.

இந்த இரத்தினக்கல் இயற்கையான கொருண்டம் இனத்தைச் சேர்ந்தது, 5.37 கரட் எடையுள்ள நீலம். என தர்மசேகர மற்றும் ஜானக ஹேமச்சந்திர ஆகியோர் கையெழுத்திட்ட அடையாளச் சான்றிதழில் காணப்பட்டது.

# குழு மோதலில் எட்டு பேர் காயம்

இரு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறில் 3 பெண்கள் உட்பட எட்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (25) இடம்பெற்றுள்ளது.

நத்தார் பண்டிகை தினத்தன்று அம்பலாங்கொடை, ஹெரியாவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில், களியாட்ட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட நபர்களின் சிலர் அயல் வீட்டில் உள்ள நபர்களுடன் தகராறில் ஈடுபட்டுள்ளதுடன் தகராறு எல்லை மீறியதால் அயல் வீட்டிலிருந்த சிலர் களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்களை இரும்பு கம்பி மற்றும் பொல்லால் தாக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதில் காயமடைந்தவர்கள் வேதர மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இதில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்கஸ்சோவிட்ட, அம்பலாங்கொடை மற்றும் கமத்தவத்த வீதியை சேர்ந்த 18 முதல் 36 வயதுக்கு உட்பட்டவர்களே தகராறில் காயமடைந்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 40 சதவீதத்துக்கு மேல் பற்றாக்குறை

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

40 சதவீதத்திற்கும் அதிகமான அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் ஆட்சியமைத்த அரசாங்கத்தால், அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையினை மட்டுப்படுத்தப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.



இதன் காரணமாக நோயாளர்களின் சிகிச்சை மற்றும் பரிசோதனை நடவடிக்கையுள் தாமதமடைந்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 80 இற்கும் அதிகமான கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதுடன் 41 உயர் டிப்ளோமாதாரிகள் தற்போது தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது 620 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சேவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வீடமைப்புத் திட்டத்தை வழங்கக் கோரி மகஜர்

எம்.ஏ.றமீஸ்

> கடந்த 20 வருடங்களாகச் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் மக்களின் துயரினை தான் நன்கு அறிவதாக பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார்

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வசித்து வரும் மக்களும் அம்பாறை மாவட்ட காணி உரிமைக்கான செயலணி அங்கத்தவர்களும் இணைந்து புதன்கிழமை(25) மாலை அக்கரைப்பற்று பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 20 ஆண்டுகளாகியும் தமக்கென நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத் திட்டத்தை களிக்குமாறு கோரி, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகள், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் தலைவர் பி.கைருதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பிரதேச செயலகம் சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

மகஜரினைக் கையேற்ற பிரதேச செயலாளர் இதனை மாவட்டச் செயலாளர், ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க உள்ளதாகவும், கடந்த 20 வருடங்களாகச் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் மக்களின் துயரினை தான் நன்கு அறிவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.





# டிப்பர் வாகனத்துடன் மோதிய ஓட்டோ

ரஞ்ஜித் ராஜபக்ஷ

தவறான திசையில் அதிவேகமாகப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று, டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் ஸ்தெட்டன் தோட்ட பகுதியில் பகுதியில் புதன்கிழமை (25) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், தவறான திசையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் முச்சக்கரவண்டியின் சாரதிக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் மரணம்

நாவுல - அம்ப கஹதேவொல காப்புக்காடு பகுதியில் புதன்கிழமை (25) அன்று இனந்தெரியாதோரால் பொருத்தப்பட்ட துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொங்கஹவெல - ரஜாவெல் பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ரத்நாயக்க முடியன்செலா கெதர ஹீன் பண்டா (39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் அம்பன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்ட விவசாய குழுக் கூட்டம், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்சனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்ஜினி முகுந்தன் (காணி), மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர்கள்,மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வீ.நவநீதன், விவசாய (விரிவாக்கம்) திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் அதிகாரிகள், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள், தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பண்ணையாளர்கள் என துறைசார் அதிகாரிகள் என பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, விசேடமாக தற்பொழுது விவசாயிகள் மத்தியில் பேசு பொருளாக இருக்கின்ற எலிக்காய்ச்சல் தொடர்பாகப் பிராந்திய சுகாதார பணிமனையின் தொற்று நோய் வைத்திய அதிகாரி ஏ.கார்த்திகாவினால் விவசாயிகள் தெளிவுபடுத்தப்பட்டதுடன், குரங்கு மற்றும் யானை தாக்கத்தினால் தாம் அதிகம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, தொடர்ச்சியாக மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சனைகளான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு, விவசாயிகளுக்கான இலவச பசளைக்கான கொடுப்பனவு, மாவட்டத்தில் உள்ள குளங்களைப் புனரமைப்பது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், பல தீர்க்கமான முடிவுகள் இதன் போது எட்டப்பட்டதாக மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.



# ஐஸுடன் இளைஞன் கைது

ஐஸ் போதைப் பொருட்களைப் பொதி செய்து விநியோகித்த ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த புதன்கிழமை(25) மாலை கல்முனை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கல்முனைக்குடி 02 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 790 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் குறித்த போதைப்பொருளுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் இளைஞன் பலி

க.அகரன்

வவுனியா - கோவில்குளம் பகுதியில் புதன்கிழமை (25) இரவு இடம்பெற்ற விபத்தில் யாழ்.அராலி பகுதியைச் சேர்ந்த 22 வயதான ப.சஞ்சயன் என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் மற்றொரு இளைஞனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும் போது, கோவில்குளம் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்சார கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் காயமடைந்துள்ளார்.



விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


## விற்பனைக்கு

கொத்தட்டுவ-கொலொண்ணாவ வீதி கட்டிடம் மற்றும் தனியார் வீதியை அனுகும் வாய்ப்புடன் கூடிய 28 பேர்ச் நிலம் விற்பனைக்கு உள்ளது. தொடர்புக்கு 070 793 8396


# 54 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்





எஸ்.கீதபொன்கலன்

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள மாகாண பாடசாலைகளில் கடமை புரிவதற்காக 54 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தணசேகரவினால் வியாழக்கிழமை (26) வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.சரத் ரட்நாயக்க கல்வி அமைச்சு செயலாளர் கே.குணநாதன் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு, டிசெம்பர் 26ஆம் திகதியுடன் இருபது ஆண்டுகள் நிறைவடைந்தன. அந்நாளில், நாடளாவிய ரீதியில் பல்வேறான அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. தங்களுடைய உறவினர்களை இழந்தவர்கள் அழுது புரண்டு, துக்கத்தை வெளிப்படுத்தினர். கரையோர பிரதேசங்களில் மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சுனாமி நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வளவு பெரிய அழிவுகளைச் சுனாமி பேரலை ஏற்படுத்தியிருந்தாலும், கடலுக்குச் சென்று நீராடுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். எனினும், கடலுக்குச் சென்றவர்களில் சிலர் வீடுகளுக்குத் திரும்புவதே இல்லை. நத்தார் தினத்தன்று திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை, மகன் மற்றும் மருமகன் காணாமல் போய்விட்டனர். ஆக கடலுக்கு மட்டுமன்றி, எந்தவொரு நீர்நிலைகளுக்குச் சென்றாலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது நாட்டில்தான் அதிக உயிர், உடமை, சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இன்னும் பல பிரதேசங்கள் புனரமைக்கப்படாமலே உள்ளன. சில பகுதிகளைப் பார்த்தால், சுனாமி தாக்கியமைக்கான தடமே இல்லை. அந்தளவுக்கு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நூறாண்டுகளை எடுத்துப் பார்த்தால், ஏழு தடவைகள் கடல் சீற்றம் ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கு வரலாறு சான்று பகர்கிறது. 1956இல், சுனாமி பேரழிவு சீனாவில் 800,000 க்கும் அதிகமான இறப்புகளை ஏற்படுத்தியது. 1976ஆம் ஆண்டில், இந்த பேரழிவு மீண்டும் சீனாவில் ஆறு இலட்சம் பேரின் உயிரைக் கொன்றது. சுனாமி இத்தாலியைத் தாக்கியது மற்றும் சுமார் 100,000 மக்களைக் கொன்றது. சுமார் ஆயிரம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, விண்வெளி சிறுகோள்கள் பூமியில் மோதியதாகவும், டைனோசர்கள் அழிந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

அப்படியானால், வருங்கால மனிதன் உலகம் அழியும் வரை

சூறாவளி, வெள்ளம், நிலச்சரிவு, தொற்றுநோய்கள் மற்றும் பிற இயற்கை பேரழிவுகளால் அவதிப்பட்டு வாழ வேண்டியிருக்கும். எனவே பேரிடர் மேலாண்மையில் மனிதன் மிகுந்த கவனம் செலுத்துவது கட்டாயம். நமது நாட்டில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படாவிட்டாலும், சர்வதேச அளவில் நிறுவப்பட்டுள்ள நில அதிர்வு தகவல் சேகரிப்பு வலையமைப்பில் இணைந்து தகவல்களைப் புதுப்பிப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும்.

உலகம் முழுவதும் சுற்றுச்சூழலை அழிப்பதால், எதிர்காலத்தில் இயற்கை பேரழிவுகளின் தாக்கம் ஆண்டுதோறும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் அடிக்கடி கணிப்பது போல், பணக்கார நாடுகள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முன்னணியில் இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தவறுகளைத் தொடர்ந்தும் செய்வேன் என கங்கணம் கட்டுபவர்கள், தங்களைத் தாங்களே சித்திரவதைக்குள்ளாக்கி அழிந்தே போய்விடுவார்கள். பலகோடி மக்கள் வாழும் பூமி இது.

ஆனால், இத்தகையவர்களின் செயல்களால், மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காது. கல்லூரிகள் வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூடும் இடங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கும் போதும் ஏற்படும் இழப்புக்கள் ஏராளம், ஏராளம்.

இவற்றைத் தவிர்க்கமுடியாது நாடுகள் கலங்குகின்றன. அமைதி பலருக்கும் பிடிப்பதில்லை. கொலைஞர்கள் தங்களைப் போன்றவர்களை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

இவர்களில் தீவிரவாதம் எது, நற்செயல் எதுவெனத் தெரியவே தெரியாது வாழ்கின்றனர். தாய், தந்தை, சகோதரர், உற்றம் சுற்றமுடன் இணைந்தவர்கள் கூட இரக்கமின்றி விஷம் சுரக்க எப்படி உருவாகினார்கள்?

அகண்ட பூமியில் அடங்காத மனிதர் இவர்கள், அன்பு, நேயம், இரக்க இன்மையால் பூமிக்குத் துன்பம் இருந்தபடியே உள்ளது. காலம் மாறும் பார்ப்போம்.

நன்றி– பருத்தியூர் பால– வைரவநாதன்.

## கடிதங்கள்

## மக்கள் அவதி




மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான சாலைகளில் உள்ள அனைத்து மின் கம்பங்களில் மின் குமிழ்கள் மிளிராத காரணத்தால் இரவு நேரத்தில் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் மற்றும் பணி புரியும் சிற்றூழியர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வைத்தியசாலை வட்டாரத்தில் உள்ள சகல மின் கம்பத்திலும் மின் குமிழிகள் பொருத்தப்பட்டு இருந்தன.

குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக அவற்றை மஸ்கெலியா மின்சார சபை அகற்றியது. வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறை மற்றும் மாவட்ட வைத்தியசாலையை கிராமிய வைத்தியசாலையாக தரம் குறைத்தமை போன்றவையுடன் சகல வசதிகளும் கொண்ட நான்கு மாடி கொண்ட இந்த வைத்திய சாலையை தரமுயர்த்த வேண்டும் என மக்கள் விடுக்கின்றனர்.

– செ.தி பெருமாள்

### போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 32

# நல்லிணக்கம் என்ற மந்திரச் சொல்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போருக்குப் பிந்தைய பிரதான கதையாடல்களில் ஒன்று நல்லிணக்கம் பற்றியது. போருக்குப் பின்னர் நொருங்குண்ட சமூகங்களை இணைப்பது பாரிய சவால். குறிப்பாக போர் ஏற்படுத்திய உயிரிழப்புக்களும் வலியும் இலகுவில் கடந்து போகக் கூடியவையல்ல.

ஆனால், போருக்குப் பிந்தைய கடந்த 15 ஆண்டுகளில் அதிகம் கவனங்குவிக்கப்பட்ட, சர்வதேச கவனம் பெற்ற ஒரே அம்சம் நல்லிணக்கம் குறித்த விடயங்களே.

இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்த வன்செயல்களின் கூட்டு நினைவுகள் பசுமையாக மனங்களில் நிறைந்திருக்கும். இந்த உண்மையை நல்லிணக்கம் குறித்த செயற்பாடுகள் தீவிரமாகச் சிந்திக்கத் தவறியுள்ளன என்பதே இலங்கை அனுபவமாகும்.

பல தசாப்தங்களாக வன்முறையை அனுபவித்த சமூகத்தை ஒரே அணுகுமுறையால் அமைதியான ஒன்றாக மாற்ற முடியாது. மாறாக, மோதல் மாற்றம் என்பது ஒரு செயல்முறையாக அல்லது இன்னும் துல்லியமாக, சிக்கல்களைத் தீர்க்கும் மற்றும் உடைந்த உறவுகளை மீட்டெடுக்கும் மற்றும் புதுப்பிக்கும் பல செயல்முறைகளாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

கடினமான சவால்களுடன் - பாதுகாப்பு, அதிகாரப் பகிர்வு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு - தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தங்கள் வலி மிகுந்த கடந்த காலங்களைச் சமாளிக்கவும் ஒருங்கிணைக்கவும், ஒன்றையொன்று சார்ந்த எதிர்காலத்தை முன்னறிவிக்கவும் வேலை செய்யவும் உதவவும் கூடிய காலத்தைக் கட்டமைப்பது அவசியம். இந்த நல்லிணக்கத்தின் சவால்கள், எல்லாவற்றிலும் மிகவும் சிக்கலானவை.

இன்று, வன்முறை மோதலின் பின்னணியில் உறவுகளை மீட்டெடுப்பது அல்லது மீண்டும் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. உலகளாவிய அனுபவங்களும் இதையே சொல்கின்றன.

கிழக்கு ஐரோப்பா, குவாத்தமாலா, தென்னாப்பிரிக்கா மற்றும் கிழக்கு திமோர் போன்ற வேறுபட்ட சமூகங்களில் நல்லிணக்க செயல்முறைகள் இந்த மாற்றத்திற்குப் பங்களித்தது மட்டுமல்லாமல், மோதல் மாற்றத்தின் பின்னணியில் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தவும் முன்னேற்றவும் தேவையான அனுபவங்களை வழங்கியுள்ளன என்பதையே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சர்வதேச சமூகமும் ஆய்வறிவாளர்களும் வலியுறுத்தினர்.

ஆனால், இந்த அனுபவங்களின் வழி இலங்கையின் நல்லிணக்கப் பொறிமுறையை சரிவர உருவாக்கவோ, நடைமுறைப்படுத்தவோ இன்றுவரை இயலவில்லை.

நல்லிணக்கம் குறித்த உரையாடலுக்கு இலங்கை நல்லதொரு களமாகும். போருக்குப் பிந்தைய இலங்கையில் நல்லிணக்கம் என்பது 'நிலைமாறு கால நீதி' என்ற பெயரைப் பெற்றது.

போருக்குப் பிந்தைய சமூகங்களுக்கு நிலைமாறு கால நீதித் தலையீடுகள் இன்றியமையாததாக இருந்தாலும், பலவீனமான, மீண்டும் வன்முறையில் ஈடுபடும் அபாயம் மற்றும் வன்முறையான கடந்த காலத்தைக் கையாள வேண்டிய அவசியம் இருந்தாலும், அது இலங்கை அரசால் அவசரமாகப் பார்க்கப்படவில்லை.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போதும், அதற்குப் பின்னரும் நிலைமாறு கால நீதி எப்போதுமே சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன குறிப்பாக,

1. அடுத்தடுத்த அரசாங்கங்களால் தங்கள் சொந்த தேவைகளுக்காகக் குறித்த விடயம் கையாளப்பட்டுக் கையகப்படுத்தப்பட்ட விதம்,
2. ஒழுக்கம் மற்றும் அதன் நடைமுறை குறித்து தவறான கதைகள்,
3. தவறான கருத்துக்களை உருவாக்கலும், அதை உருவாக்கிய ஊடகங்களுக்கும் அதைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதும்
4. முக்கிய உள்ளூர் அரங்காடிகளின் பலத்த எதிர்ப்பு,
5. அரசின் உண்மையான அர்ப்பணிப்பு இல்லாமை,
6. இதனால் அரசியல் ரீதியாக பலவீனமான மற்றும் மோசமான வளங்கள் கொண்ட நிறுவனங்களை உருவாக்கலும்.

இலங்கையில் நிலைமாறு கால நீதித் தலையீடுகள் பெரும்பாலும் மேல்-கீழ், முன்னரே தீர்மானிக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயல்முறையாகும், இது இலங்கையின் தலைமையிலான மற்றும் இலங்கைக்குச் சொந்தமான செயல்முறைகளின் தேவை குறித்து அதிக கவனம் செலுத்தவில்லை.

நிலைமாறு கால நீதிக்கான சர்வதேச கட்டமைப்பின் பயன்பாடு மற்றும் இந்த தலையீடுகள் குறித்த உள்ளூர் முன்னோக்குங்கள் மற்றும் அபிலாஷைகளை உள்ளடக்கத் தவறிய இயல்புநிலை மாதிரிகளுக்கு உலகளாவிய சமூகத்தின் முன் கணிப்பு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் நிலைமாறு கால நீதித் தலையீடுகளில் வெளிப்படையான தவறுகளும், பார்க்கத் தவறிய பக்கங்களும் உள்ளன. கடந்த கால ஆணைக்குழுக்களின் வரலாற்றை ஆராயாமல் முதலில் இலங்கையின் நாட்டின் வன்முறை கடந்த காலத்தை நிவர்த்தி செய்ய முடியாது.

உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் மனித உரிமை மீறல் வழக்குகளை விசாரிப்பதற்கும், பொது அமர்வுகள் மற்றும் வரைவு அறிக்கைகளை மேற்கொள்வதற்கும், அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட, பெரும்பாலும் தற்காலிகமான, தொடர்ச்சியான விசாரணைக்கு ஆணைக்குழுக்களின் சிக்கலான மரபு உள்ளது.

பல ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றிய விரிவான சாட்சியங்களை வழங்கியுள்ளன, அவர்களைப் பாதுகாக்காததற்காகவும், அதன் மீறல்களுக்காகவும் அரசைக் கண்டித்து, தீவிர சீர்திருத்தங்களை அமல்படுத்துமாறு அரசை வலியுறுத்தியுள்ளன. அவர்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள்

பாதிக்கப்பட்டவர்களின் நிறுவனம், துன்பம் மற்றும் உணர்வுகளை அங்கீகரித்துள்ளன.

நவ-கொலனித்துவ மற்றும் உலகளாவிய வடக்கால் ஆதிக்கம் செலுத்தும் ஒழுக்கம் மற்றும் விமர்சனங்களில் உள்ள சட்டப்பூர்வ நெருக்கடியை நிவர்த்தி செய்ய, நிலைமாறு கால நீதி, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான கலாசார அடிப்படையிலான மற்றும் பலதரப்பட்ட பொறிமுறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இலங்கையின் நிலைமாறு கால நீதி செயல்முறைகளிலிருந்து ஒரு முக்கிய பாடம், முன்னரே தீர்மானிக்கப்பட்ட தலையீட்டிற்குப் பதிலாக மிகவும் சூழல் அடிப்படையிலான மற்றும் கலாசார ரீதியாக பொருத்தமான தலையீட்டை ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் ஆகும்.

விரிவான சாட்சியங்களை நடத்திய கடந்தகால வழிமுறைகளின் மரபு மற்றும் அவற்றின் பரிந்துரைகள் மற்றொரு விசாரணைக்கு ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் அதிர்ச்சியை மீண்டும் கூறுவதற்குப் பதிலாகத் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் உண்மை போன்ற பரந்த கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் அரசின் திறனில் பொதுமக்களின் நம்பிக்கையைச் சிதைத்துள்ள சிவில் சமூக உயரடுக்குகள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் அடுத்தடுத்த அரசாங்கங்கள் பயனற்ற ஆலோசனைகளை நடத்தும் வரலாற்று முறையும் உள்ளது.

நிலம் கையகப்படுத்துதல், இராணுவமயமாக்கல் மற்றும் மதஸ்தலங்களை அழித்தல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் விருப்பமின்மை, புதிய அடக்குமுறைச் சட்டங்களை அமுல்படுத்துவது ஆகியவை அரசாங்கத்தின் சமீபத்திய சமாதான முயற்சிகள் நேர்மையற்றவை என்ற தோற்றத்தை அளித்துள்ளது. சர்வதேச மற்றும் உள்நாட்டு அழுத்தம் மற்றும் அரசியல் இலாபத்தைப் பெற இன்னமும் நல்லிணக்கம் என்பது அவசியமானதாக இருக்கிறது.

வரலாற்று அநீதிகளைச் சமாளிப்பதற்குப் பதிலாக, அரசு தான் நோக்கிச் செல்லும் திசையில், அடிப்படை உரிமைகளை, குறிப்பாக சிறுபான்மை சமூகங்களின், உரிமைகளை மேலும் மீறுகிறது.

ஆனால் தான் நல்லிணக்கத்தை வழங்குவதாக உறுதிமொழி அளிக்கிறது.

இனத்துவம் மற்றும் பெரும்பான்மைவாதம் அதன் அரசியல், சட்ட மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்புகளில் ஆழமாக வேரூன்றியிருக்கும் போது, ஒரு நாடு எவ்வாறு நிலைமாறு கால நீதி தலையீடுகளுக்கு அர்த்தமுள்ள வகையில் உறுதியளிக்க முடியும்? உள்நாட்டுப் போரின் போது அமைக்கப்பட்டவை உட்பட கடந்த காலங்களைக் கையாள்வதற்காகப் பல விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் பிற பொறிமுறைகள் பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட போதிலும், நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவை இலங்கையின் தேசத்தைக் கட்டியெழுப்பும் பிரசாரம் மற்றும் சமூக-கலாசாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கவில்லை.

இலங்கையின் நிலைமாறு கால நீதித் தலையீடுகள் வரலாற்று ரீதியாக மேல்-கீழ், அரச-உந்துதல் மற்றும் உயரடுக்கின் பல்வேறு குழுக்களுடன் பரந்த ஆலோசனைகள் மற்றும் அவர்களின் நலன்கள் மற்றும் கோரிக்கைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. வெவ்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையேயான ஊசலாட்டமும் அவற்றின் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கை நோக்கு நிலைகளும் சிறிய தாக்கத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன.

மேல்-கீழ் மற்றும் "ஒரே அளவில் அனைத்துக்கும் பொருந்தக்கூடிய" நிலைமாறு கால நீதி மாதிரியானது இலங்கை உட்பட சில சமூகங்களில் வேலை செய்யாது என்பது வெளிப்படை.

வன்முறை மோதலுக்குப் பிறகு பெரும்பான்மை வாதம் வலுப்பெறும் ஆழமாகப் பிளவுபட்ட சமூகங்களில் நிலைமாறுகால நீதியை அடைவது கிட்டத்தட்ட சாத்தியமல்ல. இதன் பொருள் நல்லிணக்கத்தைப் புறந்தள்ளுவதல்ல. மாறாக அதை அடைவதற்கான அடிமட்ட மற்றும் உள்;ர் அணுகுமுறைகள் குறித்துத் தீவிரமாக ஆராய வேண்டும். இன்றைய இலங்கை பொருளாதார

நெருக்கடியிலிருந்து மெதுவாக மீள்கின்ற நிலையில், அடுத்த வேளை உணவென்பதே பெரிய சவால்.

போருக்குப் பிந்தைய இலங்கையின் இன்றைய நிலை இதுதான். பொருளாதாரம் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு நாட்டில் நல்லிணக்கம், நீதி, உரிமை என்பன கவனம்பெறாமல் போய்விடுகின்றன.



JustPay மூலம் கொமர்ஷல் வங்கியின்

# Q+ கொடுப்பனவு செயலியை பயன்படுத்த வாய்ப்பு

LankaPay இன் 'JustPay' தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் கொமர்ஷல் வங்கியின் 'Q+' கொடுப்பனவு செயலியை தற்போது மற்றைய வங்கிகளின் வாடிக்கையாளர்களாலும் பயன்படுத்தப்பட முடியும் என்று கொமர்ஷல் வங்கி தெரிவித்துள்ளது.

JustPay இயங்குதளத்தை ஆதரிக்கும் எந்தவொரு உள்நாட்டு வங்கியின் வாடிக்கையாளர்களும் QR குறியீட்டு பரிவர்த்தனைகள், பில் கொடுப்பனவுகள், நிதியியல் பரிவர்த்தனைகள் மற்றும் 'Q+' வழியாக செயற்படுத்தப்படும் பிற கட்டண வகைகளுக்கு 'Q+' கொடுப்பனவு செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம், அத்துடன் ஆண்டு முழுவதும் சலுகைகளையும் மேலும் பல நன்மைகளையும் அனுபவிக்க முடியும் என்று கொமர்ஷல் வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதல் LANKA QR சான்றளிக்கப்பட்ட மொபைல் செயலியான Q+ கொடுப்பனவு செயலி ஆனது இலங்கை வர்த்தகர்களுக்கு LANKA QR, ஏனைய QR, Mastercard QR, Union Pay QR, Indian UPI QR மற்றும் Alipay QR ஆகிய ஆறு வகையான QR குறியீடுகளுக்கு இசைவான ஒரே QR கட்டண தீர்வாகும். JustPay உடனான அதன் ஒருங்கிணைப்பானது அதன் பயன்பாட்டை பரந்த வாடிக்கையாளர் தளமானது அணுகக்கூடியதாக ஆக்குகிறது, இதன் மூலம் வசதியை அதிகரிப்பதுடன் மேலும் உள்ளடக்கிய நிதியியல் சூழலை வளர்ப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் கொடுப்பனவு தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதில் முன்னணியில் இருக்கும் கொமர்ஷல் வங்கியானது, இலங்கையர்கள் உலகளாவிய முன்னேற்றங்களுக்கமைய வேகத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதை உறுதிசெய்யும் வகையில், இந்தத் துறையில் தொடர்ந்து மேம்படுத்துதல், புத்தாக்கம் மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

வங்கியின் பிரதம நிறைவேற்றதிகாரியான சனத் மனதுங்க கூறுகையில், 'Q+' கொடுப்பனவு செயலியை JustPay உடன் இணைப்பது ஒரு சிறந்த உதாரணமாகும். ஏனெனில், இது செயலியின் பயன்பாட்டினை விரிவுபடுத்துவதன் மூலம் அதன் செயல்பாடு மற்றும் அணுகல்தன்மையை கணிசமாக அதிகரிக்கிறது பிற வங்கி நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு, இந்த முன்னேற்றம் அதிக நிதியியல் உள்ளடக்கம் மற்றும் வசதியை ஊக்குவிக்கிறது, அதே நேரத்தில், பயனர்களுக்கு தடையற்ற, மிகவும் பாதுகாப்பான மற்றும் திறமையான கட்டண அனுபவத்தை வழங்குகிறது.

JustPay இயங்குதளத்தில் 'Q+' கொடுப்பனவு செயலியை வரவேற்று, LankaPay இன் பிரதம நிறைவேற்றதிகாரி சன்ன டி சில்வா தெரிவிக்கையில், எங்கள் JustPay வலையமைப்பில் இணையும் 29ஆவது செயலியாக 'Q+' கொடுப்பனவு செயலியை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது இலங்கையில் நிதியியல் உள்ளடக்கம் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்துவதற்கான மற்றொரு படியாகும். இந்த ஒருங்கிணைப்பு எந்தவொரு வங்கியின் வாடிக்கையாளர்களும் 'Q+' கொடுப்பனவு செயலி மூலம் கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் கட்டண தளத்தைப் பயன்படுத்த அனுமதிக்கிறது, பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு பயன்பாட்டின் கிடைக்கும் தன்மையை விரிவுபடுத்துவது, ஏற்கெனவே உள்ள வர்த்தகர்களுக்கு நன்மைகளை அதிகரிப்பதுடன் மற்றும் புதிய வர்த்தகர்களை 'Q+' கொடுப்பனவு செயலியுடன் இணைய ஊக்குவிக்கும், மேலும் உள்ளடக்கிய நிதி சூழலை உருவாக்குவது மட்டுமின்றி, புதுமைகளை உருவாக்கவும் நம்பகத்தன்மையை வழங்கவும் எங்கள் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துகிறது.

# கட்டணப்பட்டியல் திரட்டல் சேவைகளை அறிமுகம்

SLT-MOBITEL இன் மொபைல் பணக் கட்டமைப்பான mCash, லங்கா சதொச உடன் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக, நாடு முழுவதிலும் காணப்படும் லங்கா சதொச பரந்த வலையமைப்பினூடாக, கட்டணப் பட்டியல் திரட்டல் சேகைளை வழங்க முன்வந்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்திய விற்பனை அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பங்காண்மையினூடாக SLT-MOBITEL இன் mCash இனால் வலுவூட்டப்படும் நவீன நிதிசார் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினூடாக, நாடு முழுவதிலும் காணப்படும் 448க்கு அதிகமான லங்கா சதொச விற்பனை நிலையங்களில் ஒப்பற்ற கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும். இந்த பெறுமதி சேர் திட்டத்தினூடாக, சதொச வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் கட்டணப் பட்டியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகள், காப்புறுதி கட்டுப்பணங்கள், நிதியியல் மற்றும் லீசிங் கொடுப்பனவுகள் போன்றவற்றுடன் தமது வழமையான ஷொப்பிங் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

> **இலங்கையின் பரந்தளவு டிஜிட்டல் பொருளாதார செயற்பாடுகளுக்கு அனுகூலமளிக்கும் பல அனுகூலங்கள் வழங்கப்படுகின்றது**

மூலோபாய பங்காண்மையினூடாக, இலங்கையின் பரந்தளவு டிஜிட்டல் பொருளாதார செயற்பாடுகளுக்கு அனுகூலமளிக்கும் பல அனுகூலங்கள் வழங்கப்படுகின்றது. அதனூடாக நகர்புற மற்றும் கிராமிய பகுதிகளில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சேவைகளை அணுகும் திறன் பெருமளவு மேம்படுத்தப்படுகின்றது. மேலும், வாடிக்கையாளர்களுக்கு ஷொப்பிங் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை ஒரே பகுதியில் இணைத்து மேற்கொள்ளும் சௌகரியத்தை வழங்குவதுடன், பரந்தளவு சமூகங்களினுள் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களை பின்பற்றுவதை துரிதப்படுத்தும் வசதியையும் வழங்குகின்றது.

ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக, டிஜிட்டல் பரிவர்த்தனைகளை பின்பற்றுவதற்கான வழிமுறைகளை mCash வழங்கி வருவதுடன், இலங்கை முழுவதையும் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு வலுவூட்டும் தீர்வுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. பணத்திரட்டல் முகாமைத்துவம், கட்டணப்பட்டியல் வகைப்படுத்தல் சேவைகள், முகவர் வங்கியியல், QR கொடுப்பனவுகள், கொடுப்பனவு கேட்வே சேவைகள் மற்றும் பல புத்தாக்கங்களை மேற்கொள்கின்றது. நாட்டினுள் டிஜிட்டல் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதில் mCash தன்னை அர்ப்பணித்துள்ளது.



# நீங்கள்



வீட்டை சுத்தமாக்கும் போது
அம்மா அப்பாவின்
தலையினை உறைகளையும்
கழுவிக் காயப்போடும்
மகளை காட்சியாக விரிக்கிறேன்...
ஒளி கண்ட இருள்
துள்ளி குதிப்பதாய்
வெயிலில் தீடிரென
பல கனவுகள் ஆலா வட்டம் போடுகிறது...
யாரின் கனவுகள் இவையென
நினைக்க வைக்கும்
சந்தர்பத்தை தராமல்
ஒவ்வொரு கதை சொல்லிகளாக
அவை மாறியது
இந்த நூற்றாண்டில்
அதிசயம் இல்லை...
மகளாரின் நேர அட்டவணையை
எதிர்க முடியாத
கதைசொல்லி சொல்ல
தொடங்கிய கதையில்
மனுநீதிச் சோழன் மணி மட்டும்
விடுபட்டு போக
அரச வேலையும்
பிள்ளை வளர்ப்புமான
புதிய கதையை
சொல்ல தொடங்கிய
இன்னொரு கதைசொல்லி

வெயில் இறங்கும் பொழுதை
மறந்து விட்டதை
நாங்களாவது
ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டாமா?
காட்சிக்குள்
தடுப்பு இல்லாத காரணத்தால்
மகளின் மீள் வருகை
தலையினை உறைகளை
உதறி எடுத்துச் செல்ல
சொல்லிய கதைகளில்
பல சொற்கள்
என்னிலும் உங்களிலும்
ஒட்டிக் கொண்டதை
எப்படி தட்டி விடுவது...
தயங்கிதயங்கி
அம்மா அப்பாவிடம்
செல்கிறேன்...

....காரையன் கதன்....





# நாளை நமதே

பயணம் தொடரட்டும்
கனவுகள் நிஜமாகட்டும்
மீண்டும் மீண்டும் முயற்சி
பாதையும் நமதே
பயணமும் நமதே
பயமின்றி பயணிப்போம்
இலக்கும் நமதே,முயற்சியும் நமதே
இனிதாய் தொடங்குவோம்...

முடங்காமல் முயல்வோம்
தடங்கலிலும் தொடர்வோம்
அகத்தில் ஆர்வம் வைப்போம்
முகத்தில் புன்னகை வைப்போம்
படிப்படியாய் முன்னோக்கி செல்வோம்
துடிப்புடன் துணிவாய் நகர்வோம்...

எறும்பு ஊர கல்லும் தேயும்
எதையும் முயன்றால் திறக்கும் கதவும்
முட்டி மோதும் முயற்சி
எட்டி தொடுமே இலக்கை
மீண்டும் மீண்டும் முயற்சி
கொண்டு வருமே எழுச்சி...

முழு மூச்சான முயற்சி
முன்னேற்ற பாதையின் மலர்ச்சி
இறுதி வரை உறுதி
ஈட்டும் வெற்றி அறுதி...

...றொசில்டா அன்டோ...





# இப்படியும் சில சங்கதிகள்...!

மாட்டுத் தொழுவத்தில்
பாலன் அவதரித்த தின
மகிழ்ச்சியைக் கொண்டாட
ஆட்டுத் தொழுவத்தில் கட்டிய ஆடு
அவிழ்க்கப்பட்டது..!
**



நான் என்றும் கலாநிதிதான்
கிண்டலடித்தவர்களிடம்
தயங்காமல்
எனது பிறப்புச்சான்றிதழைக்
காட்டினேன்
வாயை மூடிக்கொண்டார்கள்..!
**

"சாந்தியும்
சமாதானமும் சகோரத்துவமும்
நாட்டில் நிலைக்க" என
புதுவருட வாழ்த்து வழங்கினார்
உயிர்த்த ஞாயிறில்
உதித்துவந்த தலைவர்...
**

தேங்காயுடன்
தீன்பண்டமீறாக
உச்சவிலையேற்றம் காணவேண்டுமென
பிள்ளையாருக்கு
தேங்காயுடைத்து வேண்டிக்கொண்டது
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்
எதிர்க்கட்சி..!
*************

.....ஷெல்லிதாசன்.....

# மௌன அஞ்சலி...

சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று டிசெம்பர் 26ஆம் திகதியுடன் 20 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இதனை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நினைவேந்தல், நிகழ்வுகள், நடத்தப்பட்ட சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள், காணாமல் போனவர்களை நினைவுகூர்ந்து, காலை 9.25 இலிருந்து 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– தமிழ்மிரர் நிருபர்கள்


அக்கரைப்பற்றில்...




மட்டக்களப்பில்...




ஹட்டனில்...




யாழ்ப்பாணத்தில்...




கிளிநொச்சியில்...








கல்முனையில்...




காரைத்தீவில்...




மாளிகைகாட்டில்...






மன்னாரில்...




மொனராகலையில்...




முல்லைத்தீவில்...




திருகோணமலையில்...

கனடா



## கனடா குடியுரிமை

# விதிமுறையில் மாற்றம்

கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து, அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றியும், மேற்படிப்பு படித்தும் வருகிறார்கள். அந்நாட்டில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு எக்ஸ்பிரஸ் என்ட்ரி என்ற நடைமுறை உள்ளது. இதில் அதிகளவில் இந்தியர்கள் விண்ணப்பிக்கிறார்கள்.

எக்ஸ்பிரஸ் என்ட்ரி முறையில் கனடா குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் அவர்களது கல்வி, வேலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும். அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும்.

கனடாவில் வேலை பார்ப்பதற்கான நிறுவனம் அளிக்கும் நியமன உத்தரவு கடிதத்துக்கு, 50 முதல் 200 புள்ளிகள் வரை கொடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே விண்ணப்பித்துள்ளோர் மற்றும் காத்திருப்போருக்குப் பொருந்தாது என்று, அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலி உத்தரவு கடி தங்கள் மூலம் பலர் விண்ணப்பிப்பதால், மோசடிகளைத் தடுக்க, பணி உத்தரவு கடிதங்களுக்கான மதிப்பெண்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதாக, அந்நாட்டு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவால் கனடாவில் தற்போது தற்காலிகமாக பணியாற்றும் மற்றும் பணியாற்றுவதற்கான பணி உத்தரவு பெற்றுள்ள இந்தியர்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

இது குறித்து கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் கூறும்போது,

"நமது பொருளாதாரத்திற்குத் தேவையான திறமையாளர்களை ஈர்க்கும் அதே வேளையில், மோசடியைக் குறைப்பதற்கு முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

"கனடாவின் வெற்றிக்கு குடியேற்றம் எப்போதுமே ஒரு மூலக் கல்லாக இருந்து வருகிறது. கனடாவிற்கு சிறந்த மற்றும் பிரகாசமானவற்றை வரவேற்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், இதன் மூலம் அனைவருக்கும் தரமான வேலைகள், வீடுகள் மற்றும் அவர்கள் செழிக்கத் தேவையான ஆதரவைப் பெறலாம்" என்றார்.

ரஷ்யா


### பொலிஸ் அதிகாரியை கீழே தள்ளிவிட்ட

# நெதர்லாந்து பிரஜைக்கு சிறை

பொலிஸ் அதிகாரியை கீழே தள்ளிவிட்ட நெதர்லாந்து நாட்டவருக்கு, ரஷ்ய நீதிமன்றம், 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

நெதர்லாந்தைச் சேர்ந்த ஹெறி ஜானிஸ் வென் ஹூர்டன் என்பவர், ரஷ்யாவில் வசித்து வருகிறார். இவர் கடந்த ஒக்டோபர் மாதம், மாஸ்கோவில் பொலிஸ் அதிகாரி ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். போக்குவரத்து சமிஞ்கைக்கு வைக்கப்பட்டிருந்த பலகையை உடைத்ததாகக் குற்றஞ்சாட்டியே, குறித்த நபரிடம், ரஷ்ய பொலிஸ் அதிகாரி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது, அந்த ரஷ்ய பொலிஸ் அதிகாரி குறித்த நபர் கீழே தள்ளிவிட்டதுடன், அவர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளார்.

இதையடுத்து, குறித்த நபரைக் கைது செய்த ரஷ்ய பொலிஸார், அவரை மாஸ்கோவில் வீட்டுக் காவலில் வைத்துள்ளனர். மேலும், அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.



இந்நிலையில், பொலிஸ் அதிகாரியைக் கீழே தள்ளிவிட்ட வழக்கில், குறித்த நபருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, ரஷ்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் ரஷ்யா - நெதர்லாந்துக்கு இடையேயான உறவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹைதராபாத்

### உயிரிழந்த பெண் குடும்பத்தினருக்கு

# 'புஷ்பா' படக்குழு சார்பில் ரூ.2 கோடி நிதியுதவி

ஹைதராபாத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு, 'புஷ்பா-2' பட குழு சார்பில், 2 கோடி ரூபாய் (இந்தியப் பெறுமதி) நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நடிகர் அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா உள்ளிட்டோர் நடத்த 'புஷ்பா-2' திரைப்படத்தின் சிறப்புக் காட்சி ஹைதராபாத்தில் உள்ள சந்தியா திரையரங்கில் கடந்த 4ஆம் திகதி இரவு திரையிடப்பட்டது. சிறப்புக் காட்சியைக் காண நடிகர் அல்லு அர்ஜுன் வந்தார்.

அவரை பார்க்க ரசிகர்கள் கூட்டம் அலைமோதியதால்,



அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் நெரிசலில் சிக்கி ஹைதராபாத்தை ரேவதி (வயது 35) என்ற பெண் உயிரிழந்ததுடன், அவரது மகன் ஸ்ரீதேஜ் (வயது 9) படுகாயமடைந்துள்ளார்.

இதுதொடர்பாக, நடிகர் அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டு, பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், அல்லு அர்ஜுனின் தந்தையும் தயாரிப்பாளருமான அல்லு அரவிந்த், புதன்கிழமை (25) காயமடைந்த சிறுவன் சிகிச்சை பெற்றுவரும் ஹைதராபாத் கிம்ஸ் வைத்தியசாலைக்குச் சென்று நலம் விசாரித்துள்ளார்.

அத்துடன், அல்லு அர்ஜுன் தரப்பில் 1 கோடி ரூபாய், புஷ்பா திரைப்பட இயக்குநர் சுகுமார் சார்பில் 50 இலட்சம் ரூபாய், தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவிஸ் சார்பில் 50 இலட்சம் ரூபாய் என 2 கோடி ரூபாய்க்கான காசோலையை, காயமடைந்த சிறுவனின் தந்தையிடம் அல்லு அர்ஜுன் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



### நியூசிலாந்து எதிர் இலங்கை:

# இருபதுக்கு-20 இன்று ஆரம்பம்

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இருபதுக்கு- 20 சர்வதேசப் போட்டித் தொடரானது மௌன்ட் மகட்டரேயில் நாளை முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

பானுக ராஜபக்‌ஷ அண்மையில் பெரிதாக பிரகாசித்திருக்காத நிலையில் தினேஷ் சந்திமால் அணிக்குள் உள்வாங்கப்படாமலிருக்கின்ற நிலையில் அவர் பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்திலுள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாக காணப்படுகின்ற நிலையில் சமிந்து விக்ரமசிங்க பிரகாசிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக நியூசிலாந்து சார்பாக லொக்கி பெர்கியூசன், பின் அலென், அடம் மில்ன், டிம் செய்ஃபேர்ட் ஆகியோர் அவுஸ்திரேலிய உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான பிக் பாஷில் பங்கேற்பதாலும், கேன் வில்லியம்சன், டெவோன் கொன்வே ஆகியோர் தென்னாபிரிக்க உள்ளூர் இருபதுக்கு-20 தொடரில் பங்கேற்பதாலும் இத்தொடரில் பங்கேற்கவில்லை.

எவ்வாறாயினும், நியூசிலாந்து இறுதியாக விளையாடிய



இருபதுக்கு-20 தொடரில் ஓய்வளிக்கப்பட்ட றஷின் றவீந்திர, டரைல் மிற்செல், மற் ஹென்றியின் மீள்வருகையானது அவ்வணிக்கு பலத்தை வழங்கும். தவிர முதல் முறையாக குழாமில் இடம்பெற்றுள்ள பெவன் ஜேக்கப்ஸுக்கு தன்னை நிரூபிப்பதற்கான சந்தர்ப்பமாக இத்தொடர் காணப்படுகின்றது.



## கோலிக்கு தண்டம்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டின் நேற்றைய முதல் நாளில் சாம் கொன்ஸ்டாஸின் தோளோடு மோதியமைக்காக இந்தியாவின் விராட் கோலியின் போட்டி ஊதியத்தின் 20 சதவீதம் தண்டப் பணமாக அறவிடப்பட்டதோடு, ஒரு தண்டப் புள்ளியையும் பெற்றுள்ளார்.

## சா போலோவுக்குத் திரும்பிய ஒஸ்கார்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்னாள் மத்தியகளவீரரான ஒஸ்கார், தனது இன்னொரு முன்னாள் பிரேஸிலியக் கழகமான சா போலோவுக்கு மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் இணைந்துள்ளதாக அக்கழகம் செவ்வாய்க்கிழமை (25) தெரிவித்துள்ளது.

பிரேஸிலுக்காக 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரையில் 48 போட்டிகளில் விளையாடிய 33 வயதான ஒஸ்கார், சீனக் கழகமான ஷங்காய் போர்ட்டுக்காக கடந்த எட்டாண்டுகள் விளையாடி இருந்தார்.



### இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில்

## முன்னிலையில் அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டின் முதல் நாளில் அவுஸ்திரேலியா முன்னிலையில் காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றதோடு, மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், மெல்பேணில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

இந்திய அணியில் கடந்த போட்டியில் விளையாடிய ஷுப்மன் கில்லை வொஷிங்டன் சுந்தர் பிரதியிட்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அறிமுக வீரர் சாம் கொன்ஸ்டாஸ் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. இரவீந்திர ஜடேஜாவிடம் 60 ஓட்டங்களுடன் கொன்ஸ்டாஸ் வீழ்ந்த நிலையில், உஸ்மான் கவாஜாவும், மர்னுஸ் லபுஷைனும் இனிங்ஸை நகர்த்தினர்.

ஜஸ்பிரிட் பும்ராவிடம் 57 ஓட்டங்களுடன் கவாஜா வீழ்ந்த நிலையில் லபுஷைனும், ஸ்டீவன் ஸ்மித்தும் இனிங்ஸைக் கொண்டு சென்றபோது 72 ஓட்டங்களுடன் வொஷிங்டன் சுந்தரிடம் லபுஷைன் வீழ்ந்ததோடு, ட்றெவிஸ் ஹெட் மற்றும் மிற்செல் மார்ஷ் ஆகியோர் உடனேயே சிறிய இடைவெளிகளில் பும்ரா அடுத்தடுத்து வீழ்ந்தனர்.

இந்நிலையில் ஸ்மித்தும், அலெக்ஸ் காரியும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 31 ஓட்டங்களுடன் ஆகாஷ் டீப்பிடம் காரி விழ நேற்றைய முதல்நாள் முடிவில், 6 விக்கெட்டுகளை இழந்து 311 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. தற்போது களத்தில் ஸ்மித் 68 ஓட்டங்களுடனும், ஸ்மித் எட்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.



## 'சம்பியன்ஸ் லீக்கைத் தவறவிடும் ஆபத்தில் சிற்றி'

அடுத்த பருவகால ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கை தவறவிடும் அபாயத்தில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி உள்ளதாக அக்கழகத்தின் முகாமையாளர் பெப் குவார்டியோலா தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு பிறீமியர் லீக் போட்டிகளில் ஒன்றிலேயே வென்றுள்ள சிற்றி தற்போது பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் ஏழாமிடத்திலேயே காணப்படுகின்றது. பட்டியலின் முதல் நான்கு அணிகளுமே சம்பியன்ஸ் லீக்குக்கு தகுதி பெறுமென்ற நிலையில், நான்காமிடத்திலுள்ள நொட்டிங்ஹாம் பொரெஸ்டை விட நான்கு புள்ளிகள் குறைவாகப் பெற்றுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 27, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.